# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1906/8 - 2015 මාර්තු මස 17 වැනි අඟහරුවාදා - 2015.03.17

1906/8 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி.21/1978 (xi)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 91 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

2015, மாச்சு 11.

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சகாய நிதியக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2015.03.11 ஆந் திகதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், சட்டத்தின் 90 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட (இதனகத்துப் பின்னர் “நிதியம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழகங்கள் சகாய நிதியத்தின் ஒழுங்குப்படுத்துகை, நிருவாகம் மற்றும் முகாமை என்பவற்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

பாகம் I

நிதியத்தின் உறுப்பாண்மை

3. (1) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், சட்டத்தின் 92 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துபவர்களாக வந்துள்ள அல்லது இனி வருகின்ற, ஆணைக்குழுவின் அல்லது ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துபவர் ஒவ்வொருவரும், சட்டத்தின் 92(1) என்னும் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையிலும் மற்றும் தொகையிலும் நிதியத்திற்கு உதவுதொகைகளைச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், எந்த உயர் கல்வி நிறுவனத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளதோ அந்த உயர் கல்வி நிறுவனம் அல்லது ஆணைக்குழு அதில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொகையிலான உதவுதொகையைச் செலுத்துதலும் வேண்டும்.

(3) ஒவ்வொரு மாதத்துக்கும் எவரேனும் உதவுதொகை செலுத்துபவரின் உதவுதொகை, அத்தகைய உதவுதொகை செலுத்துபவர் எந்த உயர் கல்வி நிறுவனத்தில் தொழிலுக்கமர்த்துப்பட்டுள்ளாரோ அந்த உயர் கல்வி நிறுவனத்தால் அல்லது ஆணைக்குழுவால் அத்தகைய உதவுதொகை செலுத்துபவரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் நிதியத்தில் அத்தகைய உதவுதொகை செலுத்துபவரின் தனிவேறான கணக்குக்கு அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்.

## பாகம் II

### நிதியத்தின் நிருவாகம்

4. (1) (இதனகத்துப் பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணைக்குழுவின் செயலாளர், நிதியத்தின் ஒழுங்குபடுத்துகை, நிருவாகம் மற்றும் முகாமை என்பவற்றுக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(2) செயலாளர், இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் செயலாளரின் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலருக்கு ஒன்றில் பொதுவாக அல்லது விசேடமாக அதிகாரமளிக்கலாம் என்பதுடன், அத்தகைய அலுவலர், செயலாளரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

5. செயலாளரானவர்-

(அ) உதவுதொகைகளாகச் சட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளையும் மற்றும் நிதியத்தின் பணங்களை முதலீடு செய்வதிலிருந்து பெறப்பட்ட வருமானத்தையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பணத்தொகைகளையும் வருமானத்தையும் நிதியத்திற்கு வரவு வைத்தலும் வேண்டும் ;

(ஆ) நிதியத்தின் பணங்களினது காப்பாளராக இருத்தல் வேண்டும் ;

(இ) சட்டத்தின் 94 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, சட்டத்தின்கீழ் அல்லது இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் உரித்துடையவர்களாகவுள்ள ஆட்களுக்குக் கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும் ;

(ஈ) உடனடியாகத் தேவைப்படாதிருக்கின்றவாறான நிதியத்தின் பணங்களை, இயைபான முதலீட்டுக் குழு தகுதியானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய பிணையங்களில் முதலீடு செய்யலாம் ;

(உ) சட்டத்தின் 92(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி, நிதியத்தின் பொதுக் கணக்கையும் மற்றும் ஒவ்வோர் உதவுதொகை செலுத்துபவருக்காகவும் தனிவேறான கணக்குகளையும் பேணுதல் வேண்டும் ;

(ஊ) ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் நிதியத்தின் கணக்குப் புத்தகங்கள் சமன் செய்யப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும் ;

(எ) ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும் நிதி நிலைமை பற்றிய கூற்றொன்றையும், நிதிசார் செயல் நிறைவேற்றுகை பற்றிய கூற்றொன்றையும் மற்றும் பண ஓட்டக் கூற்றொன்றையும் தயாரிக்கச் செய்தல் வேண்டும்.

6. (1) நிதியத்திற்கு இரண்டு முதலீட்டுக் குழுக்கள் இருத்தல் வேண்டும். அதாவது-

(அ) பாரிய முதலீடுகளாக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட முதலீடுகளைக் கையாள்வதற்கான பாரிய முதலீட்டுக் குழு ; அத்துடன்

(ஆ) சிறிய முதலீடுகளாக ஆணைக்குழுவினால்க தீர்மானிக்கப்பட்ட முதலீடுகளைக் கையாள்வதற்கான சிறிய முதலீட்டுக் குழு.

(2) பாரிய முதலீட்டுக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) ஆணைக்குழுவின் தவிசாளர் ;
(ஆ) செயலாளர் ;
(இ) ஆணைக்குழுவின் நிதிப்பிரிவினது தலைவர் ; அத்துடன்

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளரினால் நியமிக்கப்பட்ட சிரேட்ட முகாமைக் குழுவிலிருந்தான பிரதிநிதியொருவர்.

(3) சிறிய முதலீட்டுக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) ஆணைக்குழுவின் தவிசாளர் ;
(ஆ) செயலாளர் ; அத்துடன்
(இ) ஆணைக்குழுவின் நிதிப்பிரிவினது தலைவர்.

7. பாரிய முதலீடுகளினதும் சிறிய முதலீடுகளினதும் நிதிசார் எல்லைகள், திறைசேரியால் வழங்கப்பட்ட இயைபான விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பவற்றிற்கமைவாக வகுத்தமைக்கப்பட்ட நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையின் அடிப்படையின் மீது ஆணைக்குழுவினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

8. முதலீட்டுக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாகக் குழுக்களின் ஏதேனும் கூட்டத்துக்கு வருகை தருவதற்கான அத்தகைய படி செலுத்தப்படுதல் வேண்டும். படி என்றவாறு செலுத்தப்பட்ட பணத்தொகையும் மற்றும் முதலீட்டுக் குழுக்களின் ஏனைய செலவினங்களும் நிதியத்தின் பணங்களிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

9. (1) முதலீட்டு முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதற்கு முதலீட்டுக் குழுக்கள் கிரமமான அடிப்படையில் கூடுதல் வேண்டுமென்பதுடன், நிதியத்தின் முதலீட்டுக் கொள்கைக்கிணங்கப் பொருத்தமான முதலீட்டுக் முடிபுகளை அல்லது பொருத்தமான முதலீடுகளைச் செய்தலும் வேண்டும்.

(2) பாரிய முதலீட்டுக் குழுவினால் எடுக்கப்பட்ட முடிபுகள் ஆறு மாதங்களுக்கொரு தடவை மேற்பார்வைச் சபைக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

## பாகம் III

### மேற்பார்வைச் சபை

10. (1) காலத்துக்குக்காலம் நிதியத்தின் செயற்பாடுகளைப் பரிசீலனை செய்வதற்கும் நிதியத்தின் கொள்கைக் கருமங்களின் மீது ஆணைக்குழுவுக்கு மதியுரையளிப்பதற்கும் என ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டதும் (இதனகத்துப் பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிதியத்தின் மேற்பார்வைச் சபையொன்றிருத்தல் வேண்டும்.

(2) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) மூன்று பதவி வழி உறுப்பினர்கள், அதாவது-

(i) சபையின் தவிசாளராகவிருக்க வேண்டிய ஆணைக்குழுவின் தவிசாளர் ;
(ii) செயலாளர் ;
(iii) சபையின் செயலாளராகவிருக்க வேண்டிய ஆணைக்குழுவின் நிதிப்பிரிவின் தலைவர் ; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பின்வரும் நான்கு நியமன உறுப்பினர்கள் :-

(i) ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் துணை வேந்தர் ஒருவர் ;
(ii) பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களினது கலந்தாலோசனையுடன் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று ஆட்களிலிருந்து ஆணைக்குழுவினால் தெரிவுசெய்யப்பட்டவரும் மற்றும் பொருளியல், முகாமை அல்லது நிதிசார் நிருவாகம் என்ற துறைகளுள் ஏதேனுமொன்றில் நல்ல திறமையை வெளிப்படுத்தியுள்ள வருமான நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துபவர் ஒருவர் ;
(iii) தொழில் ஆணையாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தொழிற்றிணைக்களத்திலிருந்தான பிரதிநிதி ஒருவர் ;
(iv) திறைசேரிச் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நியதியமைச்சிலிருந்தான பிரதிநிதி ஒருவர்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண், தவிசாளர் சபையின் பதவிவழி உறுப்பினர் ஒருவர் மற்றும் சபையின் மூன்று நியமன உறுப்பினர்கள் என்போருட்பட ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(4) சபையின் ஏதேனும் கூட்டத்தில் அதன் முடிவுக்கான எல்லாக் கேள்விகளும், உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கின் மூலம் முடிவு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், சபையின் கூட்டமொன்றில் முடிவுசெய்யப்பட வேண்டிய ஏதேனும் கருமத்தின் மீது வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர் தமது சொந்த வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதலும் வேண்டும்.

(5) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்தாண்டுகாலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், முன்னரே பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீள நிமிக்கப்படுவதற்குத் தகவுடையராதலும் வேண்டும்.

(6) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அவரைப் பெயர் குறித்து நியமித்த அதிகாரிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதமொன்றினால் பதவியிலிருந்து விலகுவதன் மூலம் அல்லது அவரைப் பெயர் குறித்து நியமித்த அதிகாரியினால் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(7) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறக்கும் பட்சத்தில், ஊனமுறும் பட்சத்தில் அல்லது பதவியை வறிதாக்கும் பட்சத்தில், (2) (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய உறுப்பினரின் இடத்தில் வேறோர் ஆள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(8) சபையானது குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கொரு தடவையாவது கூடுதல் வேண்டும்.

(9) சபையின் ஏதேனும் கூட்டத்தில் அலுவல்களை நடாத்துதலை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை ஆணைக்குழு ஆக்கலாம்.

(10) ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், அவசியமென அவர்கள் கருதும் பொழுதெல்லாம், சபையின் உறுப்பினர்களுக்கு ஒரு வார அறிவித்தல் கொடுப்பதன் மூலம் சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டலாம்.

(11) சபையின் உறுப்பினர்களுக்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, சபையின் ஏதேனும் கூட்டத்துக்கு வருகை தருவதற்கான அத்தகைய படி செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய படியின் ஆகுசெலவும் மற்றும் சபையின் வேறு மீண்டுவருஞ் செலவினமும் நிதியத்தினால் பொறுக்கப்படுதல் வேண்டும்.

(12) சபையின் பணிகள் பின்வருமாறாதல் வேண்டும் :-

(அ) நிதியத்தின் செயற்பாடுகளைக் காலத்துக்குக் காலம் பரிசீலனை செய்தல் ;

(ஆ) தேவைப்பட்ட மூலதன ஒதுக்கீட்டைப் பேணும் அதே வேளையில் முதலீடுகளிலிருந்தான உயர் திரும்பல்களைப் பெறுவதற்கென நிதியம் தொடர்பான கொள்கைக் கருமங்கள் மீது மதியுரையளித்தல் ;

(இ) ஆணைக்குழுவினால் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் ;

(ஈ) ஏனைய இயைபான எழுத்திலான சட்டங்களுக்கமைவாக உதவுதொகை செலுத்துபவர்களின் தனி வேறான கணக்குகளின் வரவுக்கிருக்கும் பணத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் பற்றி ஆணைக்குழுவுக்கு மதியுரையளித்தல் ;

(உ) உதவுதொகை செலுத்துபவர்களுக்கு அதிகபட்ச நன்மைகளை உறுதிப்படுத்துவதற்கென நிதியத்தின் முதலீட்டுப் பட்டியலைப் பரிசீலனை செய்தலும் மற்றும் முதலீட்டுக் கொள்கை மீது குழுக்களுக்கு மதியுரையளித்தலும் ;

(ஊ) நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துபவர்களுக்கு வழங்கப்படுவதற்கு அவசியமென அது கருதக்கூடியவாறான வேறு நன்மைகளை முன்மொழிதல் ;

(எ) ஒவ்வோராண்டுக்காகவும் நிதியத்தின் வருடாந்த நிதிசார் கூற்றைப் பரிசீலனை செய்தலும் அடுத்துவரும் நிதியாண்டின் முதல் மூன்று மாதங்களினுள் அதன் மீதான மதியுரைசார் அறிக்கையை வழங்குதலும்.

## பாகம் IV

### நிதியத்தின் நன்மைகள்

11. (1) சட்டத்தின் 93 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, உதவுதொகை செலுத்துபவர்களுக்கு நிதியத்திலிருந்து வேறு நன்மைகள் முனையப்படலாம்.

(2) சபையானது காலத்திற்குக் காலம், ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் அத்தகைய நன்மைகள் பற்றித் தீர்மானித்தல் வேண்டும்.

(3) நிதியத்தின் நன்மையொன்றாக நிதியத்திலிருந்து உதவுதொகை செலுத்துபவரொருவருக்குச் செலுத்தப்பட்டதும், தவணை தவறியதாகவுள்ளதுமான ஏதேனும் பணத்தொகை, சட்டத்தினதும் மற்றும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, சபையினால் தீர்மானிக்கப்பட்ட முறையில் அறவிடப்படுதல் வேண்டும்.

## பாகம் V

### நியமனங்கள்

12. நிதியத்தில் அத்தகைய உதவுதொகை செலுத்துபவரின் தனிவேறான கணக்கில் வரவிற்கிருக்கின்ற பணங்களின் கொடுப்பனவுக்காக சட்டத்தின் 93 ஆம் பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவின் நியதிகளின்படி உதவுதொகை செலுத்துபவர் ஒருவரால் செய்யப்பட்ட நியமனமொன்று, பொருளளவில் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டும்.

13. நியமனமொன்றைச் செய்யவிரும்பும் உதவுதொகை செலுத்துபவர் ஒருவர் -

(அ) அவர் திருமணம் செய்துள்ள ஓர் ஆளாகவிருப்பின், அவரது வாழ்க்கைத் துணையையும் பிள்ளைகளையும் கூட்டாக அல்லது தனித்தனியாகப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும் ;

(ஆ) அவர் திருமணம் செய்யாத ஒருவராகவிருப்பின், எவரேனுமாளைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

14. ஏதேனும் நியமனத்தைச் செய்ய விரும்பாத உதவுதொகை செலுத்துபவர் ஒருவர், தனக்கு நியமனங்கள் எவையுமில்லையென நியமத்தவர்களின் நிரலில் குறித்துரைப்பதன் மூலம் தமது உட்கருத்தை வெளிப்படுத்துதல் வேண்டும் .

15. நியமனம் ஒன்று, அந்நியமனத்தைச் செய்கின்ற உதவுதொகை செலுத்துபவரின் இறப்புக்கு முன்னர், விடயத்துக்கேற்ப, அது ஆணைக்குழுவின் செயலாளருக்கு அல்லது இயைபான உயர்கல்வி நிறுவனத்தின் தலைவருக்கு செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தால் தவிர, செல்லுபடியுடையதாதலோ அல்லது சட்டத்தில் ஏதேனும் பயனுடையதாதலோ ஆகாது.

16. ஒவ்வொரு நியமனப் படிவமும், உதவுதொகை செலுத்துபவர் எந்த ஆணைக்குழுவில் அல்லது உயர்கல்வி நிறுவனத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்த ஆணைக்குழுவினது அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் பகுதி அல்லது கிளைத் தலைவரின் முன்னிலையிலும், அத்தகைய உதவுதொகை செலுத்துபவரின் கையொப்பத்தைச் சாட்சிப்படுத்த வேண்டிய வேறோர் உதவுதொகை செலுத்துபவரின் முன்னிலையிலும் உதவுதொகை செலுத்துபவரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

17. ஆளொருவர் கையொப்பமிட இயலாதவராகவிருக்குமிடத்து, அவர் தனது கையொப்பத்துக்குப் பதிலாக, உதவுதொகை செலுத்துபவர் எந்த ஆணைக்குழுவில் அல்லது உயர்கல்வி நிறுவனத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்த ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் பகுதி அல்லது கிளைத் தலைவரின் முன்னிலையிலும், மற்றும் அத்தகைய பெருவிரலடையாளம் அத்தகைய நியமனத்தைச் செய்த ஆளின் பெருவிரலடையாளமொன்றை அப்பொருள்பட நியமனப் படிவத்தைச் சான்றுப்படுத்த வேண்டிய வேறோர் உதவுத்தொகை செலுத்துபவரின் முன்னிலையில் தமது இடதுகைப் பெருவிரலடையாளத்தை இடுதல் வேண்டும்.

18. எவரேனும் உதவுதொகை செலுத்துபவரின் நியமத்தவர் ஒருவர், உதவுதொகை செலுத்துபவர் ஒருவரின் கையொப்பத்தை அல்லது பெருவிரலடையாளத்தைச் சாட்சிப்படுத்தவோ அல்லது சான்றுபடுத்தவோ தகவுடையவராதலாகாது.

19. ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்கள் பெயர்குறித்து நியமிக்கப்படுமிடத்து, நியமனத்தைச் செய்கின்ற உதவுத்தொகை செலுத்துபவர், இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலனவான நன்மைகள் எந்த விகிதாசாரங்களில் அந்தந்த நியமத்தவர்களினால் பகிரப்படவேண்டுமோ அந்த விகிதாசாரங்களை நியமனப்படிவத்தில் குறித்துரைக்கலாம்.

20. ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்கள் பெயர்குறித்து நியமிக்கப்பட்டிருந்து நியமத்தர்களுக்குச் செலுத்தப்படற்பாலனவான பங்குகள் தொடர்பான பணிப்பெதுவும் உதவுதொகை செலுத்துபவரினால் செய்யப்பட்ட ஏதேனும் நியமனத்தில் அவரினால் விடுக்கப்பட்டிராதவிடத்து, இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலனவான நன்மைகள் அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களுக்குச் சமமான பங்குகளில் செலுத்தப்படுதல் வேண்டும்.

21. (1) நியமனமொன்று பின்வரும் சந்தர்ப்பங்களில் இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் :-

(அ) நியமத்தவர் இறப்பதன் மேல் ;

(ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட நியமத்தர்கள் இருக்குமிடத்து, அத்தகைய நியமனத்தைச் செய்த உதவுதொகை செலுத்துபவரின் ஆயுட்காலத்தின்போது அந்நியமத்தவர்களுள் எவரேனுமொருவர் இறக்கும் பட்சத்தில் ; அல்லது

(இ) உதவுதொகை செலுத்துபவரொருவரினால் அவரது திருமணத்துக்கு முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் நியமனத்தின் விடயத்தில், அத்தகைய உதவுதொகை செலுத்துபவரின் திருமணத்தின் மேல்.

(2) உதவுதொகை செலுத்துபவரொருவரினால் செய்யப்பட்ட ஏதேனும் நியமனம் இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுமிடத்து, அத்தகைய உதவுதொகை செலுத்துபவர் ஒரு புதிய நியமனத்தைச் செய்யலாம்.

22. (1) நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துபவரின் நியமத்தரொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே நிதியத்திலிருந்து கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் :-

(அ) நிதியத்திற்கு அத்தகைய உதவுதொகை செலுத்துபவரின் உதவுதொகைக் காலப்பகுதியினுள் உதவுதொகை செலுத்துபவரினால் அவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்டிருப்பின்; அத்துடன்

(ஆ) உதவுதொகை செலுத்துபவர் இறப்பதன் மேல்.

(2) உதவுதொகை செலுத்துபவரொருவர் இறக்கும் நேரத்தில் நியமத்தரொருவர் பராயமடையாதவராகவிருக்கும் பட்சத்தில், அத்தகைய நியமத்தருக்கு நிதியத்திலிருந்து வருமதியான கொடுப்பனவுகள் -

(அ) இறந்துள்ள உதவுதொகை செலுத்துபவரின் மரணச்சொத்துத் தொடர்பான இறுதிவிருப்பாவன வழக்கெதுவும் இல்லாதவிடத்து, அத்தகைய நியமத்தரின் வரவுக்கு அரசாங்க அங்கீகாரம்பெற்ற வங்கியொன்றில் வைப்பிடப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) இறந்துள்ள உதவுதொகை செலுத்துபவரின் மரணச் சொத்துத் தொடர்பில் இறுதிவிருப்பாவண வழக்கொன்று முடிவுறாதுள்ளவிடத்து, நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்ட முறையிலும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும் கையுதிர்க்கப்படுதல் வேண்டும்.

23. செல்லுபடியான நியமனமெதுவும் வலுவில் இல்லாதிருப்பின் அல்லது விடயத்துக்கேற்ப, நியமத்தர் அல்லது நியமத்தர்கள் உதவுதொகை செலுத்துபவர் இறக்கும் நேரத்தில் இறந்துள்ளவிடத்து, கொடுப்பனவானது இறந்துள்ள உதவுதொகை செலுத்துபவரின் சட்டப்படியான மரபுரிமையாளர்களுக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

### கணக்காய்வும் கணக்குகளும்

24 (1) நிதியத்தின் நிதியாண்டு அரசாங்கத்தின் நிதியாண்டைப் போன்றாதாக இருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும் நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், கணக்காய்விற்கான செலவு நிதியத்திலிருந்து அவருக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும். இப்பந்தியின் கீழ் அவருக்குச் செலுத்தப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது நிதியத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அவரது திணைக்களத்தைச் சேர்ந்த எவரேனும் அலுவலர், அத்தகைய கணக்குகளைக் கணக்காய்வு செய்யும் நோக்கங்களுக்கு அவசியமெனக் கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய அலுவலர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாப் புத்தகங்களையும் அலுவலர்களையும் பார்வையிடக்கூடியவர்களாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறாகச் செயலாளரினது அறிவுக்குட்பட்ட அல்லது அதனால் அல்லது அவரினால் நிச்சயிக்கப்படற்பாலதான அத்தகைய தகவலுடன் சேர்த்து, அதனால் அல்லது அவரினால் கொடுத்துதவப்படுதலும் வேண்டும்.

(4) கணக்காய்வாளர் தலைமையதிபதி நிதியத்தின் கணக்குகளைப் பரிசோதனை செய்தல் வேண்டுமென்பதுடன் -

(அ) அவருக்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவல்களையும் தாம் பெற்றுள்ளாரா அல்லாராவெனக் கூறுகின்றதும் ;

(ஆ) அறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்குகள், நிதியத்தின் அலுவல்களினது உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை வெளிக்காட்டும் வகையில் முறையாகத் தயாரிக்கப்பட்டுள்ளனவா எனக் கூறுகின்றதும் ; அத்துடன்

(இ) அவரது அபிப்பிராயத்தில் அத்தகைய கணக்குகளின் ஏதேனும் பரிசோதனையில் பாராளுமன்றத்தில் அக்கறை கொள்ளக்கூடியதும், அத்தகைய கணக்குகளில் உள்ளதுமான ஏதேனும் விடயத்துக்குக் கவனத்தை ஈர்க்கின்றதும் ;

ஆன வருடாந்த அறிக்கையொன்றை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

## பாகம் VII

### மேன்முறையீடுகள்

25. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் -

(அ) செயலாளரினால் செய்யப்பட்ட முடிபொன்றினால் ; அல்லது

(ஆ) ஓர் உயர்கல்வி நிறுவத்தின் அல்லது ஆணைக்குழுவின் செயல் அல்லது செய்யாமை ஒன்றினால்,

இன்னலுறுகின்ற எவரேனும் உதவுதொகை செலுத்துபவர், தொழில் ஆணையாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

## பாகம் VIII

### பொருட்கோடல்

26. இக்கட்டளைச் சட்டத்தில் -

"சட்டம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் என்று பொருள்படும்.

"ஆணைக்குழு" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருளாகும்.

"உயர்கல்வி நிறுவனம்" என்பது, ஒரு பல்கலைக்கழகம், ஒரு வளாகம், திறந்த பல்கலைக்கழகம், அல்லது ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி என்று பொருளாகும் என்பதுடன், இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஓர் உயர்கல்வி நிறுவகத்தையும் அல்லது நிலையத்தையும் உள்ளடக்கும்,

"அமைச்சர்" என்பது, உயர்கல்வி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்.

"சிரேட்ட முகாமைக் குழு" என்பது, நிதியமைச்சின் பகிரங்கத் தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் 2003 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் வழங்கப்பட்ட நல்லாட்சிக்கான பகிரங்க தொழில் முயற்சிகள் வழிகாட்டுநெறிகளின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிரேட்ட முகாமைக் குழு என்று பொருளாகும்.

4- 32

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.